# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2015

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

வித்யா மாவத்தை

சொழும்பு 07.

## முன்னோட்டம்

அனர்த்த முகாமைத்துவத்யதுவ அமைச்சின் 2015ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை நிதித் சுற்றறிக்கை இல - 402 ன் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பகுதி 1 இல் பொதுவான தகவல் ஒட்டுமொத்த நிதித்திறன் மற்றும் 2015 தை மாதம் முதல் மார்கழி மாதம் வரையான காலப்பகுதி அமைச்சின் நடவடிக்கை பற்றி விவரிக்கிறது.

அறிக்கை 11

2015 ல் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தின் மேற்பார்வையின் கீழான நடவடிக்கைகளையும் செயல்திறன்களையும் விவரிக்கின்றது.

# அறிமுகம்

இலங்கைவாழ் மக்கள் முன்னொருபோதும் சந்தித்திராத நிகழ்வாக, 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் முப்பத்தைந்தாயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை, அனர்த்த முகாமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறுவதற்கு காரணமாயிற்று. இப்பேரழிவினால் 05 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம் பெயரவேண்டிய நிலை உருவானது.

இவ்வாறான உயிர்ச்சேதங்கள், பொருளாதாரப் பின்னடைவு மற்றும் சமூகத்திற்கு அதனாலான தாக்கம் தொடர்பில் நலனோம்புகைப் பணியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பிற்கு உரிய முறைவழி மற்றும் சட்டரீதியான ஒரு கட்டமைப்பின் தேவை உணரப்பட்டது. எனவே, இதுபோன்ற அனர்த்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான நிறுவன மற்றும் சட்டரீதியான கட்டமைப்பினை நிறுவுவதற்காக பாராளுமன்றத் தெரி குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த தெரி குழுவின் சிபாரிசுகளின்படி 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையும், அனர்த்த முனாமைத்துவ நிலையமும் தாபிக்கப்பெற்றன. இந்த நிறுவனங்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சானது, 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிய விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எனப் பெயரிடப்பட்டு தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டது. அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இரண்டாவது பதவி காலத்திற்கான சத்தியபிரமாணம் செய்து கொண்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக மாண்புமிகு மஹிந்த அமரவீர அவர்களும், பிரதி அமைச்சராக மாண்புமிகு டுலிப் வீஜேசேகர அவர்களும் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளராக திருமதி. எஸ். எம். மொஹமட் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்

அனர்த்த முகாமைத்துவத்தில் அமைச்சுக்குக் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், வளி மண்டளவியல் திணைக்களம், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் மூலம் அமைச்சினால் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளினால் பேரழிவு மற்றும் பேரழிவுக்கு முன் பாரிய சேவை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் அனர்த்தங்களின் போது மனித உயிர்கள், உடமைகள் மற்றும் சேவைகளை பாதுகாத்தல், பாதுகாக்கப்பட்ட எதிர்கால சமூகத்தை உருவாக்கல் மற்றும் அனர்த்தக் குறைப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

அமைச்சின் நேரடியான மேற்பார்வை, வழிகாட்டல் மற்றும் வசதிகளின் கீழ் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் 2013 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- ✓ பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குதல்

- ✓ அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கான கருத்திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் (மழைநீர்த் தாங்கி அமைத்தல் போன்றனளு)

- ✓ இயற்கை மற்றும் மனிதனின் செயற்பாடு காரணமாக நிகழும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலைமைகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கான புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ வரட்சியால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக நீர் வினியோகம் மற்றும் வரட்சி நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ அனர்த்த நிலைமைகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

- ✓ அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் விதம் மற்றும் நிவாரணப் பொறிமுறை தொடர்பாக அரச அலுவலர்களையும் பொதுமக்களையும் விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ திடீர் அனர்த்த நிலைமையொன்றில் நிவாரண நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்

- ✓ ஏற்பாட்டுச் சேவைகளை வழங்குதல

## நோக்கு

“பாதுகாப்பானதோர் இலங்கை”

## இலட்சியப் பணி

“இலங்கையில் இயற்கையாக அல்லது மனிதனின் செயற்பாடுகள் காரணமாக நிகழும் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய பிரதிகூலமான தாக்கங்களை பயன்தரும் வகையில் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதன் மூலம் சுபிட்சமானதும் உன்னதமானதுமான வாழ்க்கை முறையை உறுதி செய்தல்”.

## குறிக்கோள்கள்

- ✓ தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கையை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
- ✓ முன்னெச்சரிக்கை மற்றும் பரப்புவதற்கான பொறிமுறையை செயற்படுத்தல்
- ✓ எல்லா மட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரித்தலும் செயற்படுத்தலும்
- ✓ அபிவிருத்தி திட்டங்களில் அனர்த்த அபாய தணிப்பு நடைமுறையை பின்பற்றல்
- ✓ அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் அனர்த்த பாதிப்பு மதிப்பிடலை பின்பற்றல்
- ✓ அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்
- ✓ மண்சரிவு அபாய மதிப்பீடுகளையும் தடைநீக்கலையும் வழங்குதல்
- ✓ அனர்த்ங்களுக்கு தாக்குப்பிடிக்கும் மாதிரி வீட்டு அலகுகள் மற்றும் வழிகாட்டிகளை தயாரித்தல்
- ✓ அனர்த்தத்தினால் பாதிக்கப்படுவோருக்காக நிவாரணம் வழங்கல்
- ✓ அனர்த்த முகாமைத்துவ ஆய்வு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிகழ்த்துதல்
- ✓ அனர்த்தத்துக்கு பின்னரான புனருத்தாபனம் மற்றும் புனர்நிர்மானம்

## பணிகள்

இந்த குறிக்கோள்களை அடைவதற்காக 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அமைச்சிடம் கீழ் வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தலும் இணைப்பாக்கம் செய்தலும்.

- அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தல், எதிர்கொள்ளுதல் மற்றும் வழமை நிலைக்குக் கொண்டு வருதல் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்ளைத் தயாரித்தல்.

- சம்பந்தப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான தேசியத் திட்டங்ளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் அதிகாரிகளுடன் உடன்பட்டுக்கொண்ட கால எல்லை மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வளங்களுக்கமைய நடைமுறைப்படுத்தலும் நெறிப்படுத்தலும்.

- தேியக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தையும், அவசர நிலைமைகளில் தொழிற்படுத்தும் திட்டங்களையும் தயாரித்தல்.

- அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தல், எதிர்கொள்ளுதல் மற்றும் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பில் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் இணைப்பாக்கம் செய்தல்.

- மேற்படி பணிகள் உரிய நேரத்தில் நடைபெறுவதை உறுதி செய்து கொள்வதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் இணைப்பாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் அழிவுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தல்.

- வெள்ளப்பெருக்கு, வரட்சி, கொள்ளை நோய்கள் உட்பட்ட ஏனைய விசேட காரணங்களால் ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்குதல்.

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் அழிவுகளின் போது மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

- அனர்த்த முன்னெச்சரிக்கை கட்டமைப்புகளை செயற்படுத்தல்.

- வீடுகள், கட்டட நிர்மாண தொழிற் துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.

- வானிலை தொடர்பான மதிப்பீடுகளும் ஆராய்ச்சிப் பணிகளும்.

- அமைச்சின் கண்காணிப்பில் இயங்கும் நிறுவனங்களில் ஏனைய அனைத்து விடயங்களையும் மே
- ற்பார்வை செய்தல்.

பகுதி 1

01 நிருவாக நடவடிக்கைகள 01-08

02 திட்டமிடலும் அபிவிருத்திப் பணிகளும 09- 14

03 கணக்கீட்டு நடவடிக்கைகள் 15- 17

04 பெறுகைகள் கோரல / உள்ளக கணக்காய்வு 17

பகுதி II

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 18-48

## 01. நிருவாக நடவடிக்கைகள்

✓ புணியாட்தொகுதி

| தொ இல | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி | தற்போதைய பதவி அணி | வெற்றிடங்களின் எண் |
|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | 1 | 1 | 0 |
| 2 | மேலதிகச் செயலாளர்(நிருவாகம்) | 1 | 1 | 0 |
| 3 | மேலதிகச் செயலாளர் (நிதி நிருவாகம்) | 1 | 1 | 1 |
| 4 | மேலதிக உதவிச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 5 | பிரதான கணக்காளர் | 1 | 1 | 0 |
| 6 | பணிப்பாளர் (அனர்த்த நிவாரண சேவை) | 1 | 1 | 0 |
| 7 | பணிப்பாளர் (முகாமைத்துவம்) | 1 | 1 | 0 |
| 8 | பணிப்பாளர் (திட்டமிடல்) | 1 | 1 | 0 |
| 9 | பணிப்பாளர் (தேசிய அனர்த்த மு.சபை) | 1 | 0 | 1 |
| 10 | உதவிச் செயலாளர் | 2 | 2 | 0 |
| 11 | கணக்காளர் | 1 | 1 | 0 |
| 12 | கணக்காளர் (அகக் கணக்காய்வாளர்) | 1 | 0 | 1 |
| 13 | பி.பணிப்/உ.பணிப் (முகாமைத்துவம்) | 1 | 1 | 0 |
| 14 | பி.பணிப் /உ.பணிப் (திட்ட) | 1 | 1 | 0 |
| 15 | பி.பணிபபாளர் /உ.பணிப்(அ நி. சே.) | 3 | 2 | 1 |
| 16 | சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 17 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 18 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 19 | மொழி பெயர்ப்பாளர் | 2 | 0 | 2 |
| 20 | அபிவிருத்தி அலுவலர் | 1 | 1 | 0 |
| 21 | அபிவிருத்தி உதவியாளர் | 8 | 8 | 0 |
| 22 | அபிவிருத்தி அலுவலர் (தரம் III ) | 30 | 23 | 7 |
| 23 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 20 | 17 | 3 |
| 24 | தரவுப் பதிவு செயற்படுத்துநர் | 1 | 0 | 1 |
| 25 | தொழில்நுட்ப அலுவலர் | 1 | 1 | 0 |
| 26 | நிழற்படக் கலைஞர் | 1 | 0 | 1 |
| 27 | ஒளிப்படக் கருவி (இயக்குனர்) | 1 | 1 | 0 |
| 28 | உதவி ஒளிப்படக் கருவி இயக்குநர் | 1 | 1 | 0 |
| 29 | சாரதி | 15 | 11 | 04 |
| 30 | அலுவலக உதவியாளர் | 15 | 11 | 04 |
|  | மொத்தம் | 117 | 92 | 25 |

- **இடமாற்றமும் இளைப்பாறலும்**

2015ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை அமைச்சின் ஊழியர்கள் 07 பேர் வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதுடன் அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 12 ஆகும். அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஒருவர் அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கு மேலாக 2015இல் அலுவலக சிற்றூழியர்களாக நான்கு பேர் புதிதாக நியமனம் பெற்று வந்துள்ளனர். இடம்மாற்றம் பெற்று வந்தவர்களின் எண்ணிக்கை மூன்று ஆகும். இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் எண்ணிக்கை 05 ஆகும். சாரதி சேவையில் புதிய நியமனங்களின் எண்ணிக்கை 04 ஆகும் என்பதுடன் இடமாற்றம் பெற்று வந்தவர்களின் எண்ணிக்கை 03 ஆகும் அத்துடன் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் எண்ணிக்கை 03 ஆகும்.

- **அனர்த்த முகாமைத்துவ சட்ட மூலத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்**

இந்த சட்டமூலம் 2005ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருப்பதுடன் நடைமுறை ரீதியாக இது அமுலுக்கு வரும்போது ஏற்பட்ட பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த சட்ட நகல் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் வரையப்பட்டுள்ளதுடன் சட்டமா அதிபரின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2015 இல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த நடவடிக்கை முடிவடைந்தும் அதற்கு ஒப்பான சட்டமூலத்துக்கான குறித்த திருத்தங்கள் சட்ட வரைஞருக்கு அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்ட மூலம் திருத்தப்பட்டதன் பின்னர் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் மற்றும் இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்களை மிகவும் பயனுள்ள வகையில் முகாமைத்துவம் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.

- **தேசிய கட்டிட ஆய்வு அமைப்பு சட்ட மூலம்**

தேசிய கட்டிட ஆய்வு அமைப்புக்கு சட்ட ரீதியிலான அங்கீகாரமொன்றை பெற்றுக்கொள்வதற்காக 2011இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கட்டிட ஆய்வு நிலையத்துக்கான சட்டமூல நகல் தற்போது சட்டவரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டமூல நகலுக்கு சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய திருத்தங்களுக்கான சில யோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன் அந்த திருத்தங்கள் மீண்டும் சட்டவரைஞருக்கு அனுப்பிவைக்கப்பட்ட போது சட்டவரைஞருக்கு புதிய அமைச்சரவையின் அனுமதி பெறப்படுவது அவசியமென சுட்டிக்காட்டப்பட்டதால் மீண்டும் இதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் திருத்தப்பட்டதன் பின்னர் ஏற்கனவே இலாபமீட்டும் நிறுவனமான தேசிய கட்டிட ஆய்வு நிலையத்துக்கு சட்ட அந்தஸ்து வழங்குவதன் மூலம் மண்சரிவுகள் ஏற்படுவதை தடுக்கும் ஆய்வுகள் வெளிக்கள ஆய்வுகள் மற்றும் ஏனைய பணிகள் வெற்றிகரமாகவும் வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் பூர்த்தி செய்யப்படுவதற்காக அந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தொழில்நுட்ப சேவையை உச்சளவில் பெற்றுக் கொடுக்கவும் இயலும். அதேபோன்று நிறுவனத்தின் பணம் சம்பாதிக்கும் ஆற்றலையும் மேம்படுத்த இயலுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- ✓ **சட்ட நடவடிக்கைகள்**

2015இல் அமைச்சுக்கு எதிராக இரண்டு அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்குகளும் ஓர் ரிட் விண்ணப்பமும் விசாரிக்கப்பட்டதுடன் இதற்கு மேலதிகமாக தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்று தொழிலாளர் தீர்ப்புச் சபையில் விசாரணைக்கு உள்ளானது. இதில் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான இரண்டு வழக்குகள் சம்பந்தமாக இணக்கப்பாடு காணப்பட்டு அவை முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுடன் இந்த சட்ட நடவடிக்கைகளுக்காக 2015இல் 14 தடவைகள் தோற்ற வேண்டி ஏற்பட்டதுடன் வாத பிரதிவாதங்களை முன்வைக்கும் நடவடிக்கைகளுடன் சட்ட நடவடிக்கைகளும் நிறைவடைந்தன.

- ✓ **மக்கள் முறைப்பாடுகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நாடுகளிலிருந்து சேவைகளை எதிர்பார்த்து மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகளை செய்வதுடன் அந்தந்த முறைப்பாடுகள் அந்தந்த நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்டதுடன் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒருங்கிணைப்பு பணிகளை அமைச்சு முன்னெடுத்தது. 2015 இல் 2016 மக்கள் முறைப்பாடுகள் கிடைத்தவுடன் அந்த முறைப்பாடுகள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த முறைப்பாடுகள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு பணிகளை அமைச்சு முன்னெடுத்து வருகின்றது. 2015 இல் மக்களிடமிருந்து 126 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த முறைப்பாடுகள் தொடர் நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

- ✓ **பயனுள்ள / முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்**

“5 எஸ்” கோட்பாட்டுக்கமைய அலுவலகமொன்றை பேணுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தி விரிவுரைகள் நடத்தப்பட்டதுடன் பழைய கடிதக் கோவைகளை பட்டியலிட்டு

பதிவேட்டறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடாபாக முழு நாள் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

**பயிற்சித்திட்டங்கள்**

- ✓ **உள்நாட்டு**

அமைச்சு உத்தியோகத்தர்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன் நீண்டகால பயிற்சி நெறிகளுக்காக 2015 இல் இரண்டு உத்தியோகத்தர்களும் இலவசமாக நடத்தப்படும் குறுகியகால பயிற்சி நெறிகளுக்காக 30 உத்தியோகத்தர்களும் பணம் செலுத்தி நடத்தப்படும் குறுகியகால பயிற்சி நெறிகளுக்காக 53 உத்தியோகத்தர்களும் தமிழ் மொழி பயிற்சி நெறிகளுக்காக 20 உத்தியோகத்தர்களும் பங்கு பற்றியுள்ளார்கள்.

- ✓ **வெளிநாட்டு**

அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டு செயலமர்வுகள் கருத்தரங்குகள் கூட்டங்கள் 16க்கு 11 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

- ✓ **தேசிய பாதுகாப்பு தினம்**

2015 இல் தேசிய பாதுகாப்பு தினத்தை அனுஸ்டிக்கும் நற்காரியம் ''பாதுகாப்பான இலங்கை'' என்ற பிரதான தொனிப்பொருளில் ''அனர்த்தங்களை தணிப்பதற்கு ஒன்றுபடுவோம்'' என்ற துணைத் தொனிப்பொருளில் பொலன்னறுவையை கேந்திரமாகக் கொண்டு நடத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதன்படி அனுமதிக்கப்பட்ட நிகழ்வினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்ததுடன் அப்போதைய சீரற்ற காலநிலை காரணமாக இந்த நிகழ்வினை நடத்தாமல் இருப்பது என தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த ஞாபகார்த்த நிகழ்ச்சிக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் பிரதேச மற்றும் தேசிய மட்டத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது.

✓ **அமைச்சரவைப் பத்திரங்களும் தீர்மானங்களும்**

| இல | அமைச்சரவைப் பத்திரங்கள் | | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1. | பத்தரமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டும் ஆளடையாள செயலாக கட்டிடத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தை நிறுவு வதற்கான நிதி ஒதுக்கத்தைப் பெற்றுக்கொள்ளல். | 2015 ஆம் ஆண்டு முதல் ஓரிரு மாதங்களில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மக்கள் ஒழுங்கு, கிறிஸ்தவ மத விவகார அமைச்சுடன் தொடர்புபட்டு இருந்ததனால் இல. 01 முதல் இல. 10 வரையிலான அமைச்சரவைப் பத்திரங்கள் அதனுடன் சம்பந்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபங்களாகும். | அனுமதி கிடைத்துள்ளது |
| 2. | இராஜதந்திர, உத்தியோகபூர்வ கடவுச் சீட்டு உடையோர் வீசா அனுமதிப் பத்திரங்களைப்பெற்று விடுவிப்பதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச் சாத்திடப்பட்ட ஒப்பந்தம் | | அமைச்சு மாற்றங்களினால் இது தொடர்பான தீர்மானம் இன்னும் அமைச்சுக்கு கிடைக்கவில்லை |
| 3. | மட்டக்களப்பு இளம் கிறிஸ்தவர் அமைப்பினை கூட்டிணைக்கும் சட்டமூல நகல் | | அமைச்சு மாற்றங்களினால் இது தொடர்பான தீர்மானம் இன்னும் அமைச்சுக்கு கிடைக்கவில்லை |
| 4. | ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்துதல் இளைப்பாறிய பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. BPI கருணாரத்ன | | அனுமதி கிடைத்துள்ளது |
| 5. | வீரவில பொலிஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த செலவினத்தில் மாற்றங்களை மேற்கொள்ளல். | | அமைச்சு மாற்றத்தினால் இது தொடர்பான தீர்மானம் இவ்வமைச்சுக்குஅறிவிக்கப் படவில்லை |
| 6. | டப்ளியு. ஜோ பெரேராவினை மக்கள் ஒழுங்கு, கிறிஸ்தவ மத விவகார அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஆலோசகர் பதவிக்கு நியமித்தில் | | அமைச்சு மாற்றத்தினால் இது தொடர்பான தீர்மானம் இவ்வமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை |
| 7. | உயிரியல் தரவுகளை உள்ளடக்கிய வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களை வழங்குவதற்காக குடிவரவு குடியகல்வு சட்டத்தை திருத்துதல் | | அமைச்சு மாற்றத்தினால் இது தொடர்பான தீர்மானம் இவ்வமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை |
| 8. | விமானப் பயனிகளின் முன்னைய நடவடிக்கைகளை பதிதல், பயணிகள் தொடாபான பெயர்ப் பட்டியலைப் பெறுதல் என்பவற்றுக்கான கட்டமைப் பொன்றை குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தில் ஏற்படுத்தல் | | அமைச்சு மாற்றத்தினால் இது தொடர்பான தீர்மானம் இவ்வமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை |

| இல | அமைச்சரவைப் பத்திரங்கள் | | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 9. | உத்தேச நிருவாக முறைமையில் திருத்தம் மற்றும் இரட்டைப் பிரஜா உரிமை பெறுதல் | | அமைச்சு மாற்றத்தினால் இது தொடர்பான தீர்மானம் இவ்வமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை |
| 10. | வீரவில பொலிஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவாகும் மேலதிகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளல் | | அமைச்சு மாற்றத்தினால் இது தொடர்பான தீர்மானம் இவ்வமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை |
| 11. | 2015ஆம் ஆண்டுக்காக அனர்த்த முகாமைத்தவ அமைச்சுக்கான குறைநிரப்பு மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | | அனுமதி கிடைத்துள்ளது |
| 12. | 2014.10.29ஆந் திகதி கொஸ்லந்த மீரியபெத்த பகுதியில் மண்சரிவினால் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர்த்தல் தொடாபாக வீடுகளை நிர்மாணித்தல் தொடாபான அமைச்சரவை துணைக்குழுவின் அறிக்கை | | அனுமதி கிடைத்துள்ளது |
| 13. | தேசிய பாதுகாப்பு தினத்தை அனுஷ்டித்தல் - 2015 | | அனுமதி கிடைத்துள்ளது |
| 14. | 2015.04.25ஆந் திகதி நேபாளத்தின் கத்மண்டு நகரில் ஏற்பட்ட நில அதிர்வினால் அழிந்த இரண்டு வணக்கஸ்தலங்களை புனரமைப்பதற்கு இலங்கை அரசின் நிதி உதவிகளை வழங்குதல் | | புத்தவாசன அமைச்சுக்கு அனுமதி கிடைத்துள்ளது |
| 15. | தேசிய பாதுகாப்பு தினம் (அமைச்சரவைக் குழு) | | அனுமதி கிடைத்துள்ளது |
| 16. | தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தின் 2012ஆம் ஆண்டுக்கான அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சின் அவதானிப்புடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை (குறிப்பு) | | அனுமதி கிடைத்துள்ளது |
| 17. | அடிக்கடி ஏற்படும் காலநிலை இடர்களிலிருந்து தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்காக வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல் ஆற்றலை விருத்தி செய்தல் | | அனுமதி கிடைத்துள்ளது |
| 18. | தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக உதவிச் செயலாளர் (தொழில் உறவுகள்) இலங்கை நிருவாக சேவையல்லாத பதவியொன்றை ஏற்படுத்தல் | | அனுமதி கிடைத்துள்ளது |
| 19. | அனர்த்த முகாமைத்துவத்துக்கான சட்ட மற்றும் தாபன ரீதியிலான கட்டமைப்பினை வலுவூட்டுதல் | | அனுமதி கிடைத்துள்ளது |
| 20. | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக நியமித்தல் (இளைப்பாறிய மேஜர் ஜெனரல் திரு. எல்.பி.ஆர். மார்க்) | | அனுமதி கிடைத்துள்ளது |
| 21. | தேசிய கட்டிட ஆய்வுகள் அமைப்பின் 2013ஆம் | | இது வரை அனுமதி |

| இல | அமைச்சரவைப் பத்திரங்கள் | முன்னேற்றம் |
|---|---|---|
| | ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை இலங்கை பாராளுமன்ற சபையில் சமர்ப்பித்தல் | கிடைக்கவில்லை |
| 22. | தேசிய பாதுகாப்பு – 2015 (அமைச்சரவைக் குறிப்பு) | இதுவரை அனுமதி கிடைக்கவில்லை |
| 23. | கடும் மழை காரணமாக ஏற்பட்ட சேதங்கள் (அமைச்சரவைக் குறிப்பு) | அனுமதி கிடைத்துள்ளது |
| 24. | அமைச்சரவை செயலகத்திலிருந்து மாகாண அடிப்படையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை செயற்திறனுடன் முன்னெடுப்பதற்காக 03 ஒருங்கிணைப்பாளர் பதவிகளை ஏற்படுத்தல் | 2015.12.31ஆந் திகதி அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |
| 25. | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2012ஆம் ஆண்டுக்கான அறிக்கையை இலங்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல் | அனுமதி கிடைத்துள்ளது |
| 26. | அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான அமைச்சரவையின் அனுமதியைப் பெறுதல் | அனுமதி கிடைத்துள்ளது |

**நிதி முன்னேற்றம்**

2011ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு நடைமுறை மற்றும் மூலதன நிதி ஒதுக்கங்கள் மற்றும் அவற்றுக்கான செலவுகள் பின்வருமாறு அமையும்.






## 02. திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பணிகள்

### ✓ அபிவிருத்தி கருத்திட்ட மேற்பார்வை

அமைச்சுக்கள் மற்றும் அதனுடன் தொடர்பான வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டிட ஆய்வு நிலையம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் என்பவற்றினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் கருத்திட்ட ஒருங்கிணைப்புகள், மேற்பார்வை பணிகள் என்பன திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

01. வளிமண்டலவியல் திணைக்களத்தினால் 133 மில்லியன் ரூபா பெறுமதியான மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்ட 02 கருத்திட்டங்கள் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விரிவான வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

02. தேசிய திட்டமிடல் ஆய்வுகள் அமைப்பினால் மண்சரிவுகளை குறைப்பதற்காக 07 கருத்திட்டங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் மண்சரிவு ஆபத்துக்களை குறைப்பது தொடர்பாக ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு விசேட கவனம் செலுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதன் மதிப்பீட்டுப் பெறுமதி 300 மில்லியன் ரூபாவாகும்.

03. அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 23 கருத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் மதிப்பீட்டு செலவினம் 4451.32 மில்லியன் ரூபாவாகும்.

04. அமைச்சின் 2014ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்று அறிக்கை தயாரிக்கப்பட்டு 2015 மே மாதம் 21ஆந் திகதி பாராளுமன்ற சபையில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

05. 2015ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்பான நிறுவனங்களின் முன்னேற்றம் அடங்கிய முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வரவு செலவு கலந்துரையாடலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

06. ஆண், பெண் பாலினத் தன்மையின் அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்காக மகளிர் விவகார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு அறிக்கைக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் கிடைக்க வேண்டிய பங்களிப்பு தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டு அந்த செயலாற்று அறிக்கையை வெற்றிகரமாக தயாரிப்பதற்கான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

07. அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தை உள்ளடக்கிய தவணை அறிக்கைகளை தயார் செய்து அவற்றை கருத்திட்ட முகாமைத்துவ திணைக்களத்துக்கும் சனாதிபதி செயலகத்திற்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08. பொருளாதார முகாமைத்துவம் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் தொடர்பான பாராளுமன்ற துணைக்குழுவுக்கு அமைச்சுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படவுள்ள 30 கருத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த கருத்திட்டங்களின் பெறுமதி 45,744 ரூபாவாகும் என்பதுடன் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராய நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

09. மீரியவத்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பூனாகல மல்தெனிய பிரதேசத்தில் 75 வீடுகளை உள்ளடக்கிய வீடமைப்பு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அவற்றுள் 2015 வரை 45 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

10. அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான 03 கூட்டங்கள் விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரின் தலைமையில் நடத்தப்பட்டதுடன் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அமைச்சு அதிகாரிகளின் கலந்து கொள்ளலுடன் 06 கூட்டங்கள் வரை நடத்தப்பட்டன. இதன் மூலம் வழங்கப்பட்ட மேற்பார்வைகள் மற்றும் ஆலோசனைகள் மூலம் அமைச்சு தான் எதிர்பார்த்த இலக்கினை சென்றடைந்தது.

11. கருத்திட்ட மேற்பார்வையின் கீழ் 2015 ஆம் ஆண்டு மீரியவத்த மண்சரிவினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக நிர்மாணிக்கப்படும் புதிய வீடமைப்புத் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக 06 வெளிக்கள விஜயங்களும் கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன.

12. தேசிய கட்டிட ஆய்வு அமைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது போல் மண்சரிவு ஏற்படக்கூடிய உயர் ஆபத்துள்ள பிரதேசங்களில் உள்ள குடும்பங்களை வேறு இடங்களில் குடியமர்த்தல் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகள் நிர்மாணிக்கும் பணிகளை துரிதப்படுத்தல் சம்பந்தமாக ஆராய்வதற்காக 08 அமைச்சர்களை உள்ளடக்கி நியமிக்கப்பட்ட குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு எடுத்த தீர்மானம் தொடர்பாக செயலாற்றுவதற்காக கூட்டங்களை நடத்துதல் குறிப்பிட்ட பணிகளை துரிதப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான அறிக்கையொன்றை தயாரிப்பதற்கான திட்டமிடல்.

13. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அதனுடடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தகவல்களை உள்ளடக்கி 2016 அரச முதலீட்டு திட்டத்தை தயாரிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

✓ **இலங்கை அனர்த்த முகாமைத்தவம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் (2014-2018)**

2013 இல் ஆரம்பிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விரிவான திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் அதன் பிரதான செயற்திட்டங்கள் 43 தொடர்பாக குறிப்பிட்ட 45 நிறுவனங்களின் கீழ் இனங்காணப்பட்ட செயற்பாடுகள் 2014இல் நடைமுறைப்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2014இல் ஒதுக்கப்பட்ட பணம் 38.00 மில்லியன் ரூபாவாகும். அதன் நிதி முன்னேற்றம் 100% ஆகும் என்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தையும் அடைய முடிந்தது. 2015இல் ஒதுக்கப்பட்ட பணம் 23 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன் நிதி முன்னேற்றம் 100% ஆகும். பெற்றுக் கொள்ளப்பட்ட பௌதீக முன்னேற்றங்கள் பின்வருமாறு.

01. தேசிய கட்டிட ஆய்வு அமைப்பினால் தானாகவே இயங்கும் 15 மழை அளவீட்டு மானிகள் மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்களில் பொருத்தப்பட்டது. களுத்துறை (05), மாத்தறை (05), அம்பாந்தோட்டை (03), மொனராகலை (02) பொருத்தப்பட்டுள்ளன. இதற்கான செலவினம் 15 மில்லியன் ரூபாவாகும். அதற்கான மொத்த செலவினம் 15 மில்லியன் ரூபாவாகும்.

02. இரத்தினபுரி மாவட்டத்தில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள தானாகவே இயங்கும் 05 மழை அளவீட்டு மானிகளை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான மொத்த செலவினம் 05 மில்லியன் ரூபாவாகும்.

03. தேசிய கட்டிட ஆய்வுகள் அமைப்பினால் தற்போது பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் மண்சரிவு அபாய வலயங்களில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குதல்.

04. இலங்கை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விரிவாக்கத் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டுள்ள பிரதான 11 பங்காளி நிறுவனங்களினால் 17 கருத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையில் மேலும் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை மேற்கொண்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி 13 கருத்திட்டங்கள் 2016இல் நடைமுறைப்படுத்த அனுமதி கிடைத்துள்ளதுடன் அதன் மொத்தப் பெறுமதி 09 பில்லியனாகும்.

05. வளிமண்டலவியல் திணைக்களத்தின் 14 உத்தியோகத்தர்களுக்காக காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுகள் மற்றும் எதிர்வு கூறல் ஆற்றலை மேம்படுத்துவதற்காக பயிற்சி நெறிகளை நடத்துவதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

06. மழைவீழ்ச்சியை அளவிடும் பணிகளில் தொண்டர் அடிப்படையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

07. சுகாதார அமைச்சினால் தயார் செய்யப்பட்ட நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் வரையில் பின்பற்ற வேண்டிய முதலுவதவிகள் தொடர்பான பயிற்சி கைநூலை தயாரிப்பதற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

08. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தயார் செய்யப்பட்ட அவசர கருமமாற்றல் திட்டத்தை தயார் செய்வதற்காக உதவுதல்.

09. நீர்ப்பாசன திணைக்களத்தின் 1955ஆம் இலக்க வெள்ளப்பெருக்கு பாதுகாப்பு சட்டத்தை திருத்துவதற்கான உதவிகளை வழங்குதல்.

10. தாபன ரீதியிலான முகாமைத்துவ திட்டத்தை தயார் செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு உதவுதல்.

11. உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனர்த்த ஆபத்துக்களை குறைப்பது தொடர்பாக அந்த நிறுவனங்களின் துணை விதிகளில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தேவையான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மத்திய மாகாண சபையினால் தற்போது அவர்களது யாப்பில் இந்த விடயத்தை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

12. பதுளை மாவட்டத்தில் மண்சரிவு ஆபத்துள்ள பகுதிகளை வரைபடத்தில் உள்ளடக்குவதற்காக தேசிய ஆய்வுகள் அமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

13. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் தாபன கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதன் மூலம் மிகவும் செயற்திறன் மிக்க அனர்த்த நிவாரண சேவைகள் செயற்பாடொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

14. தேசிய விடுமைப்பு அதிகாரசபையினால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான கைநூலை அச்சிடுவதற்கு உதவுதல்.

15. தேசிய கட்டிட ஆய்வு நிலையத்துக்கு இலத்திரனியல் (Online) மண்சரிவு தகவல்களை முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான கட்டமைப்பினை தயாரிக்க உதவுதல்.

16. 17 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 1:50,000 அளவிலான அடிப்படை வரைபடங்கள் இலங்கை நில அளவைத் திணைக்களத்தடனும் இணைந்து தயாரித்து அந்த நிறுவனங்களை குறிப்பிட்ட பங்காளி நிறுவனங்களுக்கு வழங்குதல்.

17. உலக வங்கி உதவியுடன் தேசிய ஆய்வு அமைப்புக்கு சுயமாக இயங்கும் 15 மழை அளவீட்டு மானிகளைப் பொருத்துவதற்காக தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல். இதன்படி இரத்தினபுரி மாவட்டத்துக்காக 14 மழை அளவீட்டு மானிகளும், மொனராகலை மாவட்டத்துக்கு ஒரு அளவீட்டு மானியும் பொருத்தப்பட்டது.

18. அமைச்சில் இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட (web based monitoring) கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிடுவதற்கான கட்டமைப்பொன்று வடிவமைக்கப்பட்டு வருவதுடன் இதன்மூலம் அனர்த்த முகாமைத்துவத் துறையுடன் சம்பந்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை முறையாக மேற்பார்வை செய்ய மற்றும் மதிப்பீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

19. பதுளை மாவட்ட செயலாளரின் வேண்டுகோளுக்கமைய பதுளை மாவட்டத்துக்கான அனர்த்தங்களை குறைப்பதற்காக மூலோபாயத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பினை வழங்குதல்.

20. அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் DIPECHO கருத்திட்டத்துடன் இணைந்து பிரதேச மட்டத்தில் திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்கு அனர்த்த ஆபத்து செயற்பாட்டுக்கான அபிவிருத்தி திட்டங்களில் உள்வாங்குவதற்காக உரிய வழிகாட்டியை வழங்குதல்.

21. காலநிலை மாற்றங்களுக்கு ஏற்புடையதாக செயற்படும் கருத்திட்டத்தின் கீழ் (C-Cop) குருனாகல் மாவட்டத்தில் சிறிய அளவிலான 15 நீர்ப்பாசனத் திட்டங்களை பூரணமாக புனர் நிர்மாணஞ் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் அந்தக் கருத்திட்டத்தின்படி கமத்தொழில் சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து 16 நீர்ப்பாசன திட்டங்களில் சேறுகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட



வெள்ளப்பெருக்கு பாதுகாப்பு திட்டத்தை திருத்துவதற்கான செயலமர்வு



கன்றுகளை நடுதல் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டம்



குளங்களை புனரமைத்தல் (குருனாகல்)

## 03. கணக்கு நடவடிக்கைகள்

✓ **செலவு மதிப்பீடு – 2015**

| | அமைச்சு அலுவலகம் 106 – 01 - 01 | | நிர்வாகம் - தாபன சேவைகள் 106 – 01 – 02 | |
|---|---|---|---|---|
| | நடைமுறை | மூலதனம் | நடைமுறை | மூலதனம் |
| மதிப்பீட்டு ஏற்பாடு | 35,800,000.00 | 1,200,000.00 | 77,890,000.00 | 390,820,000.00 |
| நி.பி. 66இன் கீழ் மாற்றம் செய்தல் மற்றும் குறை நிரப்பு ஒதுக்கம் | 5,060,000.00 | 350,000.00 | (540,783.00) | 540,783.00 |
| தேறிய ஏற்பாடு | 40,860,000.00 | 1,550,000.00 | 77,349,217.00 | 391,360,783.00 |
| செலவுகள் | 34,691,655.00 | 1,299,244.00 | 62,824,519.00 | 59,781,686.00 |
| செலவுகள் விகிதம் | 84.90% | 83.82% | 81.22% | 15.27% |

✓ **செலவுகளுக்கான நிதி முகாமை**

| குறியீடு | செலவு நிதி முகாமைத்துவம் | தேறிய ஒதுக்கம் | உண்மையான செலவினம் | செலவு வீதம் |
|---|---|---|---|---|
| 11 | உள்நாட்டு நிதி | 260,900,000.00 | 116,177,705.00 | 44.52% |
| 12 | வெளிநாட்டு கடன் நிதி | 1,000,000.00 | - | - |
| 13 | வெளிநாட்டு நிதி உதவிகள் கடன் | 249,220,000.00 | 42,419,399.00 | 17.02% |

✓ **அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**

| | செலவுகளின் உச்ச எல்லை | கிடைப்பவற்றின் குறைந்தபட்ச எல்லை | உச்ச எல்லை பற்று மீதி |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுக் கணக்கில் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லை | 7,000,000.00 | 2,500,000.00 | 16,000.000.00 |
| 2015.12.31ஆந் திகதி உண்மையான மீதி | 6,798,291.28 | 5,084,493.78 | 12,514,651.00 |

✓ **2015.12.31ஆந் திகதியன்று கடன் / முற்பணம்**

| **கடன் வகை** | **கடன் அளவு (ரூபா)** | **கடன் பெற்றோர் எண்ணிக்கை** |
|---|---|---|
| விழா முற்பணம் | 2,005,000.00 | 201 |
| விசேட முற்பணம் | 124,000.00 | 31 |
| இடர் கடன் | 4,621,933.00 | 42 |

✓ **பெறுகைகள் கோரல்**

| **மூலதனம்** | **அமைச்சு அலுவலகம்** | | **அமைச்சு அலுவலகம்** | |
|---|---|---|---|---|
| | **நிதி ஒதுக்கம்** | **செலவு** | **நிதி ஒதுக்கம்** | **செலவு** |
| 2102 - தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 500,000.00 | 443,237.00 | 1,115,000.00 | 1,114,304.00 |
| 2103 - இயந்திர உபகரணங்கள் | 850,000.00 | 794,693.00 | 885,000.00 | 865,651.00 |
| மொத்தம் | 1,350,000.00 | 1,237,930.00 | 2,000,000.00 | 1,979,955.00 |
| நிதி முன்னேற்றம் | 92% | | 99% | |
| **மூலதனம்** | **அமைச்சு அலுவலகம்** | | **அமைச்சு அலுவலகம்** | |
| | **நிதி ஒதுக்கம்** | **செலவு** | **நிதி ஒதுக்கம்** | **செலவு** |
| 1201 – எழுதுகருவிகளும் அலுவலக தேவைகளும் | 1,110,00.00 | 1,104,407.00 | 1,600,000.00 | 1,594,572.00 |
| மொத்தம் | 1,110,00.00 | 1,104,407.00 | 1,600,000.00 | 1,594,572.00 |
| நிதி முன்னேற்றம் | 99% | | 100% | |

- ✓ 2015 ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பீ முற்பணக் கணக்குகள் 2015.12.31ஆந் திகதி தயாரிக்கப்பட்டு கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- ✓ பாராளுமன்ற கணக்குகள் பற்றிய குழு மற்றும் கணக்காய்வு கூட்ட அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**05. உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்**

2015ஆம் ஆண்டுடன் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் மூன்று கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் விசேட ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட துறைகள் பின்வருமாறு

1. 2015ஆம் ஆண்டுக்கான ஆரம்ப அறிக்கை
2. 2015ஆம் ஆண்டுக்கான இரண்டாம், மூன்றாம் தவணைகளுக்கான அறிக்கை
3. தேசிய அனர்த்த சேவைகள் நிலையத்தின் 2014ஆம் ஆண்டுக்கான பண்டங்கள் ஆய்வு அறிக்கை மற்றும் பொருட் பதிவேடுகளை பரிசீலித்தல்
4. வளிமண்டலவியல் திணைக்களம் தொடர்பாக கிடைத்த மேன்முறையீடுகளுக்கமைய விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு மேலாக கணக்குகள் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் மூன்று நடத்தப்பட்டதுடன் கிடைத்த கணக்காய்வு கேள்விகளின் எண்ணிக்கை 55க்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தொடர்பாக 11 கணக்காய்வு கேள்விகள் கேட்கப்பட்டதுடன் அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் இவ்வாண்டில் பதில் அனுப்பப்பட்டுள்ளன.

# பகுதி 11

# தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

## அறிமுகம்

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் (தற்போதைய தேசிய அனர்த்த சேவைகள் நிவாரண நிலையம்) 1996இல் சமூக சேவைகள் சமூக நலன்புரி அமைச்சின் கீழ் இயங்கியதுடன் நிவாரணங்கள், புனர்வாழ்வு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக 1422/22ஆம் இலக்க மற்றும் 2005.12.08ஆந் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. 2007.01.09ஆந் திகதிய 1482/09ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் அது தேசிய அனர்த்த சேவைகள் நிலையத்தின் கீழ் வெளியிடப்பட்டு மீள்குடியமர்த்தல் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

1651/20ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2010.04.30ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் அந்த விடயப்பொறுப்பு அமைச்சர் மற்றும் அமைச்சு செயலாளரினால் வழங்கப்படும் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய அது நடைமுறையில் உள்ளது. தேசிய அனர்த்த சேவைகள் நிலையத்தின் அனைத்து கருத்திட்டங்களும் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுநிருவாக பொறிமுறைக்கமைய குறிப்பிட்ட மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் வழிகாட்டல்களுக்கமைய நடைமுறையில் உள்ளது. அதே போன்று அந்த பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக மாவட்ட செயலகங்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் அபிவிருத்தி உதவியாளர்கள் (அனர்த்த முகாமைத்துவம்) அபிவிருத்தி உதவியாளர்கள் (அனர்த்த நிவாரண சேவைகள்) பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நோக்கம்

அனர்த்தங்களுக்குப் பின்னரான நிவாரண சேவைகள் மூலம் மிகவும் பாதுகாப்பான இலங்கையொன்றை உருவாக்குதல்.

## பணிகள்

இயற்கை மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களினால் ஏற்படும் அனர்த்தங்களினால் ஏற்படும் பெரும் பாதிப்புக்கள் தொடர்பாக பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் அவற்றை வழமை நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் மனித உயிர்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றை பாதுகாத்தல்.

## குறிக்கோள்கள்

